சி.தி.து.ந.க.எண்.பி2/0669/2022

பெருநகர சென்னை மாநகராட்சி
சிறப்பு திட்டங்கள் துறை

# அறிவிப்பு

துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஒப்புதல் நாள்.26.09.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு திட்டங்கள் துறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து இவ்வருடத்திற்கான விண்ணப்பங்கள் 01.04.2022 முதல் பெறப்பட்டு, 2022-2023 முதல் 2024-2025 (Financial Year) வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்ததாரர்களின் பதிவினை புதுப்பித்து வழங்கப்பட்டு வருகிறது. ஒப்பந்ததாரர்கள் மூன்று ஆண்டுக்களுக்கான (01.04.2022 முதல் 31.03.2025 வரை) ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பிக்க விண்ணப்பங்கள் ஏப்ரல் 30ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், விண்ணப்பிக்க தவறியவர்கள் புதுப்பித்தல் தொகையுடன் காலதாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ.1,000/- வீதம் அபராத தொகையுடன் சேர்த்து செலுத்தி ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பிக்கவும் ஆணை பெறப்பட்டுள்ளது. இந்நிலையில், 6 மாதங்களுக்கு மேலாகியும் 2022-2023ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் தொடர்ந்து பெறப்பட்டு வருவதால், விண்ணப்பங்கள் பெற காலஅவகாசம் நிர்ணயித்து, 31.10.2022ஐ கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 31.10.2022க்கு பின்னர் புதுப்பிக்க விண்ணப்பிக்கும் ஒப்பந்ததாரர்களின் பதிவினை அந்தந்த வகுப்பில் உரிய கட்டணம் செலுத்தி மறுபதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | வகுப்பு | விண்ணப்ப கட்டணம் | பதிவு கட்டணம் |
|---|---|---|---|
| 1 | வகுப்பு-I முதல் IV வரை | ரூ.5,000/- | ரூ.50,000/- |
| 2 | வகுப்பு-V | ரூ.1,000/- | ரூ.10,000/- |

ஒம்/-B.V. பாபு / 29.09.2022
கண்காணிப்பு பொறியாளர்
சிறப்பு திட்டங்கள் / பாலங்கள்